14.12.2023 ரமேஷ் என்கிற காசி (பக்கம் 3)

எச்.எம்..ஒ.பி.338/19

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி=

திருமணத்திற்கும் நிச்சியதார்த்திற்கும் இடையே எவ்வளவு காலம் இருந்தது என்று ஞாபகம் இல்லை. எதிர்மனுதாரர் உடன் பிறந்தவர்கள அவரையும் சேர்த்து 3 நபர்கள் ஆவார். என்னுடன் உடன் பிறந்தவர் ஒரே தங்கை ஆவார். எனது தங்கையை காஞ்சிபுரத்தில் தான் திருமணம் செய்து கொடுத்தோம்.' திருமணத்திற்கு பின்னிட்டு எதிர்ர்மனுதாரர் என்னுடன் சுமூகமான நிலையில் வாழ்ந்து வரவில்லை. திருமணத்தின் பயனாக எனக்கு ஒரே ஒரு குழந்தை உள்ளது. குழந்தையின் பெயர் நவீன்ராஜ் ஷா ஆகும். எனது மகன் எந்த தேதி, வருடம். மாதத்தில் பிற்ந்தான் என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. சாட்சி தற்போது 11.10.2010 அன்று பிறந்ததாக சாட்சியம் அளிக்கிறார். பிரசவத்திற்கு பின்பு என் மனைவி எனது வீட்டிற்கு தான் வந்தார். அவர் தாய் வீட்டிற்கு செல்லவில்லை. நானும் எதிர்மனுதாரரும் சுமூகமாக இருந்த காரணத்தினால் தான் பிரசவத்திற்கு பின்பு என் வீட்டிற்கு வந்தார் என்றும் நாங்கள் இருவரும் சுமூகமான நிலையில் இல்லை என்று இவ்வழக்கிற்காக வேண்டி பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகன் தற்போது 8ம் வகுப்பு படிப்பதாக கேள்விபட்டேன். ஆன்டர்சன் உயர்நிலை பள்ளியில் எனது மகன் படித்து வருகிறான். எனது மகனை பார்க்க பலமுறை நடவடிக்கை எடுத்தும் எதுவும் பலன் அளிக்கவில்லை. அவனை பள்ளியில் சென்று பார்க்க முயலவில்லை. கா.நிலையத்தில் புகார் கொடுத்து என்னுடைய மகனை பார்க்க எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. நீதிமன்றத்தில் எனது மகனை பார்ப்பதற்காக வேண்டி எந்த ஒரு மனுவையும் தாக்கல் செய்யவில்லை. நான் எனது மகனை பார்ப்பதற்காக வேண்டி சட்டபூர்வமான எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். குழந்தை பிறந்ததில் இருந்து இதுநாள் வரை அவருடைய தேவைகளை என்னுடைய மனைவி தான் பூர்த்தி செய்து வருகிறார் என்றால் சரிதான்.

(எதிர்மனுதாரர் வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)